18.02.2026 Mcop 318 /2024 .ம.சா 1 மகேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு **1 ம்எதிர்மனுதாரர் தரப்பில்** குறுக்குவிசாரணை

விபத்தில் இறந்து போன என் தகப்பனார் திருமலைக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் விபத்தினால் அந்த ஒட்டுனர் உரிமம் காணாமல்போய்விட்டது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா ஒட்டிசென்ற வாகனத்தின் காப்பீடு சான்று மற்றும் பதிவு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் விபத்தினால் அதனை காணவில்லை. விபத்தானது தென்வடல் சாலையில் நடந்தது என்றால் சரிதான். என் அப்பா தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றார் என்றால் சரிதான். ஆட்டோ வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். என் அப்பா அளவிற்கு அதிகமான மதுபோதையில் வாகனத்தை ஒட்டிவந்துவிபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் அப்பா மது அருந்த மாட்டார். என் அப்பாவின் பிரேத பரிசோதனை அறிக்கையில் மது அருந்தி இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மது போதையில் சென்று என் அப்பாவாக விபத்தை ஏற்படுத்தி கொண்டதால் குற்ற வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா மது போதையில் சாலையை கடந்து 1ம் எதிர்மனுதாரர் ஒட்டி வந்த ஆட்டோ மீது விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தனது வாகனத்தை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார் என்றால் சரிதான். விபத்தின் போது 1ம் எதிர்மனுதாருக்கு ஒட்டுனர் உரிமம் இருந்தது என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் ஆட்டோவிற்கு தகுதிசான்று, அனுமதிசான்று இருந்தது

என்றால் அது பற்றி தெரியாது. எங்களுக்கு இழப்பீட்டை 2 ம்எதிர்மனுதாரர் மட்டுமே தான் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

என் அப்பா ஒட்டிசென்ற வாகனத்தின் காப்பீடு சான்று, ஒட்டுனர் உரிமம் போன்றவை காணாமல் போய்விட்டாலும் அதனை நகல் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். எனது அப்பா அதிகபடியான மதுபோதையில் சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டதாக இதச பிரிவு 304(2)ன்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதனை பொறுத்து நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் அப்பாவின் மதுபோதை, அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கையில் 1 ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. என் அப்பா இறந்துவிட்டதால் மேல்நடவடிக்கை இல்லை என குற்ற வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரேதபரிசோதனை அறிக்கையில் உள்ளுறுப்புகளை ஆய்வு செய்ய அனுப்பப்பட்டு நிலுவையில்உள்ளது என்றால் தெரியவில்லை. உள்ளுறுப்புகளை ஆய்வு செய்த அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த அறிக்கையில் அதிகபடியான மது போதையில் இருந்ததால் விபத்து ஏற்பட காரணமாக இருந்தார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த அறிக்கையின் அடிப்படையில் தான் காவல்துறையினர் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1 ம்

எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் அப்பாவின் வயது, வேலை, வருமானத்தை பற்றி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குற்றவழக்கின் மாதிரிவரைபடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எங்களுக்கு எதிராக இருப்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் அப்பாவின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் நான் மனு தாக்கல் செய்துள்ள பிரிவுகள் தவறானது என்றால் சரியல்ல. என் அப்பாவின் வருமானத்தை மாதம் ரூ.20 ஆயிரம் என காட்டப்பட்ட நிலையில் அந்த தொகையான ரூ.3300/-க்கு மேல் இருப்பதால் எங்களுக்கு இழப்பீடு தொகை கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.

**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 318 /2024

ம.சா 2 தங்கத்துரை

| | |
|---|---|
| Name | : தங்கத்துரை |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :18.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கின் 3ம் நபர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் மூ.த.சா.ஆ 1

1ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தானது தென்வடல் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். இறந்து போன திருமலை தெற்கில் இருந்து வடக்க நோக்கி சென்றார் என்றால் சரிதான். ஆட்டோ வடக்கில் இருந்து தெற்குநோக்கி வந்தது என்றால் சரிதான். திருமலை டி.வி.எக்ஸ் எல் வாகனத்தில் வந்தார் என்றால் சரிதான். அவர் அதிகபடியான மதுபோதையில் தள்ளாடி கொண்டே வந்தார். அவர் ஒட்டி வந்த வாகனத்தில் தள்ளாடி சென்று சாலையின் மத்திக்கு சென்று ஆட்டோ மீது மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல. விபத்தானது சாலையின் ஓரத்தில் நடந்தது. காவல்துறையினர் தாக்கல் செய்த மாதிரிவரைபடத்தில் சாலையை தாண்டி சென்று கீழ்பக்கத்தில் விபத்து நடந்ததாக குறியீட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாதிரி

வரைபடத்திற்கும், காவல்துறை விசாரணைக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சமயம் நான் அங்கு எதற்காக சென்றேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான் அறிவேன் சாட்சியாகவோ, நான் புகாரோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதியறிக்கையில் நான் அரசு தரப்பு சாட்சி இல்லை என்றால் ஞாபகமில்லை. விபத்து நடந்த இடத்தில் நான் இருந்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். சம்பவயிடத்தில் நான் இல்லை என்பதால் தான் அரசு ஆவணத்தில் சாட்சியாகவோ எனது பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கை இறந்து போன திருமலை மீது தான் போடப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. பிரேதபரிசோதனை அறிக்கையில் திருமலை அதிகபடியான போதையில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்து போன திருமலைக்கு நான் தூரத்து உறவினர் ஆவேன். மனுதாரர்கள் சொல்லி தான் இன்று சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இறந்து போனவர் என் ஊரை சேர்ந்தவர் என்பதால் நான் ஆவணங்களுக்குஎதிராக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்க நம்பதகுந்த சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.